# SG Digital
## மின்னஞ்சல் பயன்பாட்டு வழிமுறைகள்



## உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் எங்கிருந்தும், எந்த நேரத்திலும் இணையம்வழி தகவல்கள் அனுப்பவும் பெறவும் மின்னஞ்சல் பயன்படுத்தலாம். மின்னஞ்சல் விரைவாகவும் செயலாற்றலோடும் தகவல் அனுப்ப துணை புரிகிறது. நீங்கள் சில நிமிடங்களில் தகவல் உருவாக்கி அனுப்பி வைக்கலாம். ஒரே சமயத்தில் பல பேருக்குத் தகவல் அனுப்பலாம்.

## படிநிலை 1 உங்கள் கைப்பேசியில் மின்னஞ்சல் செயலியை நிறுவுங்கள்

**ஆப்பிள் ஆப் ஸ்டோர்** அல்லது **கூகல் பிளே ஸ்டோர்** சென்று, உங்களுக்குப் பிடித்த கைப்பேசி செயலிகளைப் பதிவிறக்குங்கள். எடுத்துக்காட்டுகள்:

**மின்னஞ்சல்**

- ஜீமெயில்
- அவுட்லுக்
- யாஹூ

## படிநிலை 2 மின்னஞ்சல் முகவரிக்குப் பதிவு செய்யுங்கள்




நீங்கள் மின்னஞ்சல் செயலியை நிறுவிய பிறகு, செயலியைச் செயற்படுத்தி பின்வருமாறு செய்யுங்கள்:

1. உங்கள் பெயர், பிறந்த தேதி போன்ற விவரங்களை நிரப்புங்கள்.
2. உங்களுக்குப் பிடித்த மின்னம்சல் முகவரியை உள்ளிட்டு, வலுவான மறைச்சொல்லை உருவாக்குங்கள்.
3. கூடுதல் சரிபார்ப்புக்காக, உங்கள் கைப்பேசி எண்ணை உள்ளிடுங்கள் (உங்கள் விருப்பத்திற்கு உட்பட்டது).
4. உங்கள் “inbox”-ல் வரவேற்பு மின்னஞ்சலைப் பெறுவீர்கள். அந்த மின்னஞ்சலைத் திறந்து, உங்கள் கணக்கை ஆராயத் தொடங்குங்கள்!

## படிநிலை 3 மின்னஞ்சல் எழுதி அனுப்புங்கள்




5. மின்னஞ்சல் எழுதுவதற்கு ‘+’ பொத்தானைத் தட்டுங்கள்.




6. மின்னஞ்சலைப் பெறுவோரின் மின்னஞ்சல் முகவரியை ‘To’ பகுதியில் நிரப்புங்கள்.

   **CC** மற்றும் **BCC** தெரிவதற்கு கீழ்நோக்கிய அம்புக்குறியைத் தட்டுங்கள்.




7. நீங்கள் அனுப்ப விரும்பும் தகவலை எழுதி, மின்னஞ்சலைப் பெறுநர்களுக்கு அனுப்பி வைக்க சின்னத்தைத் தட்டவும்.

*குறிப்பு: வெவ்வேறு மின்னஞ்சல் கைப்பேசி செயலிகளில் வெவ்வேறு சின்னங்கள் இருக்கலாம்.*

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: சிங்கப்பூர் இணையப் பாதுகாப்பு அமைப்பு)*

- எப்போதும் மின்னஞ்சலின் மூலத்தைச் சரிபாருங்கள். மின்னஞ்சலில் உள்ள சந்தேகத்திற்குரிய “லிங்க்” அல்லது இணைப்புகள் மீது க்ளிக் செய்யாதீர்கள்.
- தனிப்பட்ட அல்லது நிதி விவரங்களை மின்னஞ்சல்வழி தெரிவிக்காதீர்கள்.
- வசதி இருந்தால், கூடுதல் சரிபார்ப்புக்காக இரட்டை மறைச்சொல் முறையை (2FA) செயல்படுத்துங்கள்

SG:DIGITAL
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY